முதல் கூடுதல் மாவட்ட நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.

முன்னிலை - திருமதி.எஸ்.எழில், எம்.எல்.,
முதல் கூடுதல் மாவட்ட நீதிபதி,
2026 ம் வருடம் மார்ச் மாதம் 24 ம்நாள் செவ்வாய்கிழமை
(திருவள்ளுவராண்டு 2057-ஸ்ரீ விசுவாவசு வருடம்-பங்குனி திங்கள் 10 ம்நாள்)

இடைநிலை மனு எண்.1/2026
அசல் வழக்கு எண்.201/2016

ஆர்.சின்னசாமி .. மனுதாரர் / பிரதிவாதி

// எதிர் //

ஏ.சிவசம்பு .. எதிர்மனுதாரர் / வாதி

03.03.2026 ம் தேதியிட்ட இம்மனு உ.வி.மு.ச. கட்டளை 8, விதி 9 மற்றும் பிரிவு 151 ன்படி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு, இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள கூடுதல் எதிர்வழக்குரையை ஏற்றுக் கொள்ளக் வேண்டுமென்று கோரப்பட்டுள்ளது.

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக 17.03.2026 ம் தேதி இறுதியாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, மனுதாரர் தரப்பில் திரு.எல்.ஆர்.பாலசுப்பிரமணி, வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் திரு.என்.குமரேசன், வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும்,இருதரப்பு தரப்பு வாதுரைகளைக் கேட்டும், இதுநாள்வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து மனு கோப்பைப் பரிசீலனை செய்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்:

## உத்தரவு

இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள கூடுதல் எதிர்வழக்குரையை ஏற்றுக் கொள்ளக் வேண்டுமென்று கோரி மனுதாரரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனு உரையின் சுருக்கம்:</u>

மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி ஆவார். எதிர்மனுதாரர் கடனுறுதிசீட்டின் பேரில் தாவா தொகையை வசூலிக்க வேண்டி மேற்படி அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார். மேற்படி தொகையை இந்த மனுதாரர் வாங்கவில்லை. அதன் பேரில் கடனுறுதிசீட்டு எழுதிக் கொடுக்கவில்லை. அதனால் தாவா தொகையை கொடுக்கும் கடமைப்பாடு இம்மனுதாரருக்கு இல்லை. ஒரு சண்முகராமசாமி என்பவர் ராஜேந்திரனின் மாமனார் ஆவார். மேற்படி ராஜேந்திரன் ஈரோடு, இரண்டாம் கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் அ.வ.எண்.40/2017 என்ற வழக்கை தன் மீதும், தன் மனைவி மீதும் தாக்கல் செய்துள்ளார். சண்முக ராமசாமியும், எதிர்மனுதாரரும் வியாபாரத்தில் கூட்டாளி ஆவார்கள். சண்முக ராமசாமியும், எதிர்மனுதாரரும் சேர்ந்து மனுதாரரின் சொத்தை அபகரிக்கும் எண்ணத்தில் இந்த வழக்கை ளதாக்கல் செய்துள்ளார்கள். சண்முக ராமசாமியும், எதிர்மனுதாரரம் சேர்ந்து மோசடியான ஆவணங்களை ஏற்படுத்தியுள்ளார்கள். அதனால் மனுதாரர் வழக்கு தொகை செலுத்த அவசியம் இல்லை. ஈரோடு மாவட்ட குற்ற பிரிவு ஆய்வாளர் அவர்களால் குற்ற எண்.6/2024 பிரிவு 120B , 420, 465, 468 , 471 இதசவின் கீழ் சண்முகராமசாமி மற்றும் எதிர்மனுதாரர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. ரத்தினசாமி என்பவர் ரீ.சர்வே எண்.1583/2B, 3, 1584/1A, 1B மற்றும் 3 துய்யம்பூந்துறை 'சி' கிராமத்தில் 9.96.67 ஏக்கர் விஸ்தீரணத்திற்கும், ரீ.சர்வே எண்.1596/1B ல் 95 செண்ட் விஸ்தீரணத்திற்கும் உரிமையாளர் ஆவார்.அவர் ஒரு பாபு மற்றும் சரவணன் ஆகியோரிடமிருந்து ரூ.1,00,00,000/-ஐ கடன் பெற்றுக் கொண்டு 14.02.2022 ல் ஒரு கிரய பத்திரம் எழுதி கொடுத்துள்ளார். மேலும் அவர் வியாபார தேவைக்காக ரூ.3,00,00,000/-ஐ சண்முக ராமசாமியிடமிருந்து பெற்றுக் கொண்டு, அதற்காக பொது அதிகார பத்திரம் மற்றும் கிரய ஒப்பந்த பத்திரம் ஆகியவற்றை மேற்படி சண்முக ராமசாமிக்கும், அவரது மனைவிக்கும் எழுதி கொடுத்து முறையாக வட்டி செலுத்தி வந்தார். 26.08.2023 ம் தேதியில் இந்த எதிர்மனுதாரரும் மற்றும் சிலரும் ஒரு மோசடியான வாழ்நாள் சான்று ஏற்படுத்திக் கொண்டு ஒரு ராஜாமணி மற்றும் சக்தி கணேஷ் ஆகியோருக்கு மேற்படி 9.96.67 ஏக்கரை பொறுத்து கிரய பத்திரம் எழுதி

கொடுத்துவிட்டனர். அவர்கள் 30 செண்ட்டை சட்டத்திற்கு புறம்பாக அனுபவித்து வருகிறார்கள். சண்முக ராமசாமி மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் வஞ்சக கூட்டாக சேர்ந்து மோசடியான ஆவணங்களை ஏற்படுத்தி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். கடனுறுதிசீட்டு மோசடியானது. எதிர்மனுதாரர் வங்கி பாஸ்புத்தகத்தை தாக்கல் செய்யவில்லை. வருமானவரி கணக்கையும் தாக்கல் செய்யவில்லை. அதனை பொறுத்து விளக்கமான கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வேண்டியுள்ளது. ஆகவே இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிர்வழக்குரையை ஏற்றுக் கொள்ள வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே இம்மனுவை அனுமதிக்க வேண்டும்.

3. <u>எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்உரையின் சுருக்கம்:</u>

இந்த மனு சட்டப்படி செல்லத்தக்கதல்ல. எதிர்மனுதாரரால் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ள சங்கதிகளைத் தவிர மற்றவற்றை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர். இந்த எதிர்மனுதாரர் தரப்பில் சொல்லப்படுவது யாதெனில், இவ்வழக்கு 04.10.2016 ல் தாக்கல் செய்யப்பட்டு மனுதாரர் தரப்பில் 07.11.2016 ல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, இந்த எதிர்மனுதாரரால் 09.11.2016 ல் பதிலுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த எதிர்மனுதாரர் சாட்சியாக விசாரிக்கப்பட்டு குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்ட நிலையில் இந்த வழக்கு நடவடிக்கைகளை காலதாமதப்படுத்தும் நோக்கில் இம்மனுவை தவறான விவரங்களை கூறி மனுதாரர் தாக்கல் செய்துள்ளார். ஈரோடு குற்றப் பிரிவு காவல் நிலைய குற்ற எண்.6/2024 ன் தொடர்பான இந்த மனு தாக்கல் செய்யப்பட்ட போதிலும், மேற்படி குற்ற நடவடிக்கை எந்த வகையில் மனுதாரருக்கு உதவும் என்பதற்கான யாதொரு விவரமும் காணப்படவில்லை. அது தொடர்பான ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை. மேற்படி குற்ற வழக்கை முன் வைத்து மனுதாரர் தனது கடப்பாட்டிலிருந்து தப்பிக்க இயலாது. மேலும் வழக்கு நடவடிக்கைகளையும் காலம் கடத்த இயலாது. மனுதாரர் 10 வருடங்களாக வழக்கு நடவடிக்கைகளை நீட்டித்து விட்டு தற்போது மீண்டும் காலதாமதப்படுத்தும் நோக்கில் இம்மனுவை பொய்யான விவரங்களை கூறி தாக்கல் செய்துள்ளார்.

4. மனுதாரர் தாவா கடனுறுதி சீட்டில் உள்ள கையெழுத்தையும், கைரேகையையும் மறுக்கவில்லை. மனுதாரர் தரப்பில் இ.ம.எண்.84/2017 என்ற மனுவை தாக்கல் செய்து தாவா கடனுறுதி சீட்டில் உள்ள கைரேகை குறித்து எந்த நடவடிக்கையும் எடுக்காமல் கையெழுத்துகளை மட்டும் கையெழுத்து நிபுணர்களுக்கு அனுப்பி வைக்க மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில் ஆணையரை நியமிக்கப்பட்டு கூடுதல் ஆவணங்கள் கையெழுத்து நிபுணரால் கோரப்பட்டது. இருப்பினும் மனுதாரர் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளாத நிலையில் மனு 20.08.2025 ல் முடிக்கப்பட்டுவிட்டது. மனுதாரர் கையெழுத்துக்களை பொருத்து கையெழுத்து நிபுணரின் அறிக்கையை பெறவில்லை. மனுதாரர் கூறுவது போல் தாவா கடனுறுதிசீட்டில் கையெழுத்துக்கள் மோசடியாக ஏற்படுத்தப்பட்டு இருப்பின் அதில் இரண்டு கையெழுத்துக்கள் ஏற்படுத்தப்பட்டிருக்காது. அதோடு மனுதாரர் கைரேகைளை குறித்து கைரேகை நிபுணரின் அறிக்கை பெற முயற்சிக்கவில்லை.மனுதாரர் இந்த வழக்கிற்கு எவ்வகையிலும் தொடர்பற்ற சங்கதிகளை முன் வைத்து இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் மனுவில் கோரி பரிகாரத்தை பெற எவ்வகையிலும் உரிமையற்றவர் ஆவார். எனவே இம்மனுவை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

5. இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினையாகும்.

6. <u>பிரச்சினைக்குத் தீர்வு:-</u>

இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. மனு கோப்பு பரிசீலிக்கப்பட்டது. இவ்வழக்கு 04.10.2016 ல் தாக்கல் செய்யப்பட்டுள்ளதில் மனுதாரர் தரப்பில் 07.11.2016 ம் தேதியன்று எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளதில், 09.11.2016 அன்று எதிர்மனுதாரர் தரப்பில் பதிலுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு விசாரணக்கு எடுக்கப்பட்டு வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்ய வாய்தா வழங்கப்பட்டுள்ளதில் இம்மனுதாரர் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய அனுமதி கோரி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். மேற்படி ஈரோடு குற்றப் பிரிவு காவல் நிலைய குற்ற எண்.6/2024 ன் தொடர்பான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

இவ்வழக்கு தாவா கடனுறுதிசீட்டின் பேரில் தாவா தொகை கோரி தாக்கல் செய்யப்பட்டு 10 வருடங்களாக நிலுவையில் உள்ளது.

7. மனுதாரர் தரப்பில் ஏற்கனவே எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளதில் மேற்படி கடனுறுதிசீட்டு மோசடியானது என்று சொல்லப்பட்டுள்ளது. மேற்படி ஆவணம் எந்த சூழ்நிலையில் ஏற்பட்டது என்பது குறித்து விளக்கத்துடன் கூடிய கூடுதல் எதிர்வழக்குரை இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள கூடுதல் எதிர்வழக்குரையை பரிசீலனை செய்கையில், அதில் புதிய சங்கதிகளோ, முரண்பாடான சங்கதிகளோ சொல்லப்படவில்லை. வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட நிலையில் காலதாமதமாக கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு இருப்பினும், தரப்பினர்களுக்கு அவர்களுடைய எதிர்வாதத்தை முன்னிட போதிய வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்பதால் இம்மனுவை செலவு தொகையுடன் அனுமதிக்கலாம் என்றும், மேற்படி கூடுதல் எதிர்வழக்குரைக்கு எதிர்மனுதாரர் /வாதி பதிலுரை தாக்கல் செய்யவும் அனுமதிக்கலாம் என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்து மேற்படி பிரச்சினைக்கு தீர்வு காண்கிறது.

**முடிவாக,** மனுதாரர், எதிர்மனுதாரருக்கு செலவு தொகையாக ரூ.2000/-ஐ வருகின்ற 30.03.2026 ம் தேதிக்குள் நேரடியாக செலுத்தும்பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என்றும், தவறும் பட்சத்தில் இம்மனு தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 30.03.2026.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு ஒலிவடிவில் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2026 ம் வருடம் மார்ச் மாதம் 24 ம்நாள் அவையறிய திறந்த இந்நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

S EZHIL Digitally signed by S EZHIL Date: 2026.03.24 19:51:33 +0530

முதல் கூடுதல் மாவட்ட நீதிபதி,
ஈரோடு

<u>சாட்சிய சான்றாவணப் பட்டியல்</u>
(..இருதரப்பில் தாக்கல் இல்லை ..)

S EZHIL Digitally signed by S EZHIL Date: 2026.03.24 19:51:39 +0530

மு.கூ.மா.நீ., ஈரோடு.

<u>அசல்/வரைவு உத்தரவு</u>
<u>இ.ம.எண்.1/2026</u>
அ.வ.எண்.201/2016
நாள் 24.03.2026
மு..கூ.மா.நீ.ம., ஈரோடு.